மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண்.173/2019

2021–ம் ஆண்டு ஜனவரி மாதம் 27–ம் நாள் புதன் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :ஜெய்னுலாப்தீன் | தொழில் | : |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :சையத் தாவூத் சாகிப் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :வாலிகண்டபுரம் | சமயம் | : |
| சாதி | : | வயது | :75/2021 |

**முதல் விசாரணை**

நான் மேற்படி வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். கடந்த 28.12.1987 தேதியிட்ட தாவா சொத்தையும் மற்றும் சில சொத்தையும் பொருத்து எனது பெயரில் உள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும், மேற்படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது பெயரில் உள்ள வீட்டு வரி ரசீதுகள் அசல்( 2 எண்ணிக்கை) **வா.சா.ஆ.2** ஆகவும், தாவா சொத்தில் நான் நடத்திவரும் கடைக்கு நான் செலுத்திய தொழில் வரி ரசீதுகள் அசல் (2 எண்ணிக்கை) **வா.சா.ஆ.3** ஆகவும், 30.01.19995 தேதியிட்ட 4ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் எனக்கு கொடுத்த அறிவிப்பு **வா.சா.ஆ.4** ஆகவும், 06.02.1995 தேதியிட்ட 4ம் பிரதிவாதிக்கு நான் கொடுத்த பதில் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகவும், மேற்படி வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** ஆகவும், ஆணையர் தாக்கல் செய்த வரைபடம **நீ.ம.சா.ஆ.2** ஆகவும், சர்வேயர் தாக்கல் செய்த வரைபடம் **நீ.ம.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**